**பாலிந்தநுவர பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாலிந்தநுவர பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பதுரலிய நகரத்தில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 16,574,529 தொகையான கடை தொகுதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதனமாக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களை மூலதனமாக்கும் போது ரூபா 428,025 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | வளிப்பதனாக்கி இயந்திரம் மற்றும் கணனி துணைப்பாகங்களின் கூட்டுத்தொகையான ரூபா 243,500 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பை கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 917,395 தொகையான புத்தக இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பௌதீக இருப்பின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 252,450 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 649,574 பெறுமதியான வேலைக் கடன் கொடுத்தோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, உரித்தை காண்பிக்கின்ற பதிவேடு, உரித்துறுதி மற்றும் கையளித்தல் கட்டளை, பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பொருட் பதிவேடு என்பன காணப்படாமையினால் ரூபா 138,071,892 கூட்டுத் தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | - | | | |
| (i) | 134(1) ஆம் பிரிவு | - | ஆதன வரிக்காக புதிய இனங்காணல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 160 ஆம் பிரிவு | - | நிலுவை ஆதன வரியை அறவிடும் இறுதி கட்டமாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆதனங்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 மே 17 ஆம் திகதி 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | - | ஆதன வரிக்கு உரித்தான ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது புதிய மதிப்பீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,516,080 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,678,732 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 177,290 | 2,240,964 | 2,207,492 | 212,599 | 263,712 | 2,259,271 | 2,342,647 | 177,290 |
| (ii) | வாடகை | 357,963 | 6,627,410 | 6,689,827 | 295,546 | 249,638 | 5,493,701 | 5,385,376 | 357,963 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | - | 291,000 | 291,000 | - | - | 292,000 | 292,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,810,709 | 8,083,094 | 4,817,206 | 16,065,364 | 13,927,229 | 7,081,746 | 10,198,596 | 10,810,709 |
| | | 11,345,962 | 17,242,468 | 14,005,525 | 16,573,509 | 14,440,579 | 15,126,718 | 18,218,619 | 11,345,962 |

### 2.2.2 ஆதன வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதன வரி நிலுவை மீதியில் 01 வருத்திற்கு குறைவான 137 அலகுகளுக்கான நிலுவை ரூபா 68,624 தொகையும், 01 – 03 வருடங்களுக்கு இடையிலான 50 அலகுகளுக்கான நிலுவை ரூபா 33,232 தொகையும், 03 – 05 வருடங்களுக்கு இடையிலான 02 அலகுகளுக்கான நிலுவை ரூபா 3,089 தொகையும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட 90 அலகுகளுக்கான ரூபா 53,732 தொகையும் காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையுள்ள வரியிறுப்பாளர்கள் அநேகமானோரை கண்டுபிடிப்பதற்கு முடியாதிருந்தது. |

### 2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

#### (அ) நீதிமன்ற தண்டப் பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பண வருமானம் ரூபா 1,600,000 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

#### (ஆ) முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் முத்திரைக் கட்டணமாக ரூபா 14,310,000 தொகை கிடைக்க வேண்டியதாக இருந்ததுடன், 2020 யூன் 30 ஆம் திகதி வரையில் மேலும் ரூபா 7,698,080 தொகை கிடைக்க வேண்டியதாக காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| முறையான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டம் உரிய பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்திட்டங்களை நிறைவேற்றாமை மற்றும் வெளிவாரி செயற்திட்டங்களை நிறைவேற்றுதல்.

---

| | | |
|---|---|---|
| ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கான செயற்திட்டத்தின் ரூபா 0.03 மில்லியன் கிரயமான 15 செயற்திட்டங்கள் இனங்காணப்பட்ட போதிலும், 07 செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கிரயம் ரூபா 1,551,612 தொகையான 05 செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைகத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வெளிவாரியாக செய்யப்படுகின்ற பணிகளுக்காக தேவையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | அதிகார பிரதேசத்தின் தேவையின் அடிப்படையில் செயற்திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட போதிலும், மாகாண சபைக்கு கிடைக்கின்ற கோரிக்கையின் அடிப்படையில் செயற்திட்டங்களுக்காக நிதி அனுப்பப்படுகின்றது. சபை நிதியத்திலிருந்து நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(இ) வருடாந்த பராமரிப்பு திட்டங்கள் தயாரித்தல்

---

| | | |
|---|---|---|
| வீதிகள் மற்றும் மதகுகளை பராமரிப்பதற்காக ரூபா 1,500,000 தொகை பாதீடு செய்யப்பட்ட போதிலும், திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக பராமரிப்பு திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் பராமரிப்பு திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஈ) எதிர்பார்த்த நலன்கள் பெறப்படாமை.

---

| | | |
|---|---|---|
| பொது மக்களுக்கு குடி நீரை வழங்குவதற்காக சபையினால் அமுல்படுத்தப்பட்ட கட்டுஹேன இருபது ஏக்கர் குடிநீர் செயற்திட்டம் ரூபா 762,541 தொகை செலவிடப்பட்டு 2019 செப்தெம்பர் மாதம் வேலை முடிவடைந்திருந்த போதிலும், செயற்திட்டத்தின் நோக்கம் இது வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் இறுதியில் அதில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ளல் வேண்டும். | மிகவும் விரைவாக இந்த செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அகலவத்தை பிரதேச சபை 2006 ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் பாலிந்தநுவர மற்றும் அகலவத்தை என இரண்டு பிரதேச சபைகளாக பிரிக்கப்பட்டிருந்த போதும், பாலிந்தநுவர பிரதேச சபைக்கு உரித்தாக வேண்டிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளிப்பதற்கு 2020 யூன் 12 ஆம் திகதி வரையிலும் முடியாதிருந்தது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பகிர்ந்து கொள்ளல் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளூராட்சி அமைச்சும் திணைக்களமும் முன்நின்று நடவடிக்கை எடுக்கின்றது. |
| (ஆ) | மாகாண அபிவிருத்தி மானியம் 2018 இன் கீழ் ரூபா 750,000 கிரயமொன்றை செலவிட்டு மின்சார பாதுகாப்பிற்காக மாற்றுவழி வலு சக்தியை பயன்படுத்தும் நோக்கில் மாதமொன்றுக்கு 300 அலகுகளுக்கும் 325 இற்கும் இடையிலான இயலளவையுடைய சூரிய வலு சக்தி முறைமையொன்று சபை கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த போதிலும், 2020 யூன் 12 ஆம் திகதி வரையிலும் மின்சார பட்டியலில் போதுமான அளவில் குறைவடைந்திருக்கவில்லை. | செயற்திட்டங்கள் அமுலாக்கிய பின் அதன் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த அதிகார பிரதேசத்தில் நிரந்தரமாக மழையுடன் கூடிய காலநிலை காணப்படுகின்றமையினால் எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கப் பெறவில்லை. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நூலகர், வருமான பரிசோதகர் மற்றும் சாரதி பதவி என்பவற்றில் வெற்றிடங்கள் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | உள்ளூராட்சி திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி 12 ஊழியர்கள் 2019 யூன் மாதம் முதல் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளூராட்சி திணைக்களத்தின் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் போதியளவில் இல்லாமையினால் |

| | | |
|---|---|---|
| போது ரூபா 1,755,635 தொகை சம்பளமாக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகாரத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட வேண்டும். | நாட்கூலி அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கட்டிடம் மற்றும் மோட்டார் வாகனங்களும் வண்டியும் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பௌதீக ரீதியில் காணப்படுகின்ற சகல சொத்துக்களும் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4.2 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களஞ்சிய பௌதீக பரிசோதனையின் போது ரூபா 23,250 பெறுமதியான GI குழாய்கள் 21 மற்றும் பெறுமதி ரூபா 85,750 தொகையான 49 பாகிஸ்தான் குழாய்கள் என்பவற்றில் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. | நட்டத்தை அறவிடுவதற்கு நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 பெறுகைகள்**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாலுகையும்

**மாகாண கணக்குகள் செயற்குழுவின் தீர்மானங்கள் அமுல்படுத்தப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 04 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடைபெற்ற மாகாண அரச கணக்குகள் செயற்குழுவினால் 2011 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 1.2(ஈ) 1.3.3(i) 1.3.3(vi), 1.5 1.6(ii), 2012 இன் கணக்காய்வாளர் அறிக்கையின் 2.1.1(இ), 2.2(ஆ)(i), 2.2.4(ஆ)(ii) மற்றும் 2013 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 1.2.2(ஆ), 1.3.2 என்ற பந்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கட்டளைகள் 2020 யூன் 12 ஆம் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது பரீட்சித்தல் நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |